**O.S.No. 253/2018**

**Date:25.10.2025**

**பி.வா.சா 1 சுடர் வண்ணன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் வீரமணி. 1ம் பிரதிவாதி வீரமணி வக்காலத்தில் கையெழுத்திட்டு அவரும் நீங்களும் சேர்ந்து வழக்கறிஞர் வைத்து இந்த வழக்கை நடத்துகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். பிராது தபசில் சொத்து ஆதியில் எனது தாத்தா கருப்பையா தேவருக்கு பாத்தியப்பட்டது. பிராது தபசில் சொத்து எனது தாத்தா கருப்பையா தேவருக்கு அவரது தாயார் வழியில் கிடைத்த சொத்து என்றால் சரிதான். அந்த பிராது தபசில் சொத்தையும், அதனுடன் சேர்ந்த சொத்தையும் பி.வா.சா.ஆ.1 மூலம் கருப்பையா தேவர் அவரது மனைவி கருப்பாயம்மாளுக்கு குடும்ப ஏற்பாடு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது பாட்டி கருப்பாயம்மாள் தான் இந்த வாதிக்கு பிராது தபசில் சொத்தை எழுதி கொடுத்துவிட்டாரா என்றால் இல்லை. எனது பாட்டி கருப்பாயம்மாளுக்கும் எங்களுக்கும் தென்மலை கிராமம் பாகம் 1ல் புல எண்.679/2 எவ்வித சொத்தும் கிடையாது என்றால் சரிதான். எனது பாட்டி கருப்பாயம்மாள் பொய்யாக எந்த ஆவணமும் பிறப்பித்து கொடுக்க மாட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள தென்மலை கிராமத்தில் குடியிருந்து வரும் எஸ்.டி கருப்பையாதேவர் மனைவி கருப்பாயாம்மாள் எனது பாட்டிதான் என்றால் சரிதான். கருப்பையா தேவர் மனைவி கருப்பாயம்மாள் எனது பாட்டிதான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருப்பாயம்மாள் எனது பாட்டி கிடையாது.

கருப்பாயம்மாள் மகன் வீரமணி எனது தந்தை என்றால் சரிதான். கருப்பாயாம்மாள் மகள் தமிழரசி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருப்பாயமாள் மகள் மதியரசி என்றால் உண்டு. பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதிக்குரிய உரிமை குறித்து நான் என் எதிர் வழக்குரையில் என்ன கட்சி செய்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் பிறப்பதற்கு முன்பு கருப்பாயம்மாள் மற்றும் வீரமணி குடும்பத்திற்குள் நடந்த நடவடிக்கை விபரங்கள் என்க்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது எனது அப்பா தாத்தா பாட்டி சொல்லி தெரியும். எனது பிறப்பு பற்றி எனது தாய் தந்தை தான் அறுதியிட்டு கூறமுடியும் என்றால் ஆவணங்களின் மூலம் தெரியவரும். என் தந்தை எப்போது பிறந்தார் அவரது வயது என்ன என்பது எனது பாட்டி கருப்பாயம்மாளுக்கு தான் தெரியும் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து 1968 ம் வருட கிரைய ஆவணமான பி.வா.சா.1ல் கண்ட கிழமேல் தெருவிற்கும் தெற்கு, தென்வடல் தெருவிற்கும் கிழக்கு உள்ள சொத்தை பொறுத்து தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நான்கு திசைகளை சொன்னால் தான் சரியாக சொல்ல முடியும். மேற்படி தெரு போக குருசாமி பாண்டியன் மனை நிலத்திற்கும் வடக்கு, முத்துக்குமாரசாமி மனை வீட்டுக்கும் மேற்கு என மால் குறிப்பிட்ட பகுதி சொத்தை பொறுத்து தான் இந்த வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 4 மால்களுக்குள் எனது சொத்து தான் உள்ளது. முத்துக்குமாரசாமி பிள்ளை இப்போது ஊரில் இருக்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

முத்துக்குமாரசாமி பிள்ளையின் இடத்தில் தற்போது யார் குடியிருந்து வருகிறார் என்று கேட்டால் தெரியாது. வடக்குப்புறம் மாலாக காட்டப்பட்டுள்ள குருசாமி பாண்டியன் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் தெற்கு புறம் உள்ள மால் நாடார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட பொது இடமாக அனுபவித்து வரப்படுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கீழ்பக்கம் உள்ள முத்துக்குமாரசாமி பிள்ளை இடம் என மால் காட்டப்பட்ட பகுதியில் சுப்பையாத்தேவர் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது சொத்திற்கு கீழ்பக்கம் தற்போது சுப்பையாதேவர் குடியிருந்து வருகிறார் என்றும், தென்பக்கம் நாடார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டு பொது இடமான அனுபவம் செய்து வரப்படுகிறது என்ற விபரமும் எங்களுக்கு நேரடியாக தெரியும் ஆனால் வழக்கிற்காக மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.